**தலைப்பு 205 - பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 205 - பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 நவம்பர் 28 ஆந் திகதி பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 47.36 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 46.78 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 0.58 மில்லியன் அதாவது 1.22 சதவீதமான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 45.02 | 44.47 | 0.55 | 1.22 |
| மூலதனம் | 2.34 | 2.31 | 0.03 | 1.28 |
| **மொத்தம்** | **47.36** | **46.78** | **0.58** | **1.22** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 20501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2.50 | 2.49 | 1.30 | 2.31 | 10.00 | 6.50 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பு பூதல்களின் இறுதிக் கணக்கு, 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிராமையால், 2016 ஆம் ஆண்டிற்குரிய நம்பிக்கைப் பொறுப்பு பூதல்களின் நிதி நிலைமை மற்றும் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 3.2 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| **(அ)** | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** | விலைக்கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| **(ஈ)** | முதலீட்டு பதிவேடு | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.2(ஈ) பந்தி | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |

### 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2017 நவம்பர் 30 ஆம் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுக்கும் உரித்தான கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 265.84 மில்லியனாக இருந்தது.

**3.4 நல்லாளுகையும் கணக்களிதகைமையும்**

**3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 உள்ளகக் கணக்காய்வு**

14 துறைகளின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய 67 செயற்பாடுகளுக்காக உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது 9 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் முக்கியமான கணக்காய்வு துறைகளான நம்பிக்கைப் பொறுப்பு கணக்குளில் காண்பிக்கப்படும் மீதிகளை உறுதிப்படுத்தல், முதலீட்டுப் பதிவேடுகள் மற்றும் பங்கு சான்றிதழ்களைப் பரிசோதித்தல், வங்கி உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல், சரியாக வட்டி மற்றும் பங்குலாபம் கிடைத்துள்ளதையும் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் உறுதிப்படுத்துவது தொடர்பில் உள்ளகக் கணக்காய்வின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** |
|---|---|---|
| | **ரூபா** | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(1) | 188,000 | கட்டுநிதிகள் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட முடியுமான போதிலும், தனியார் நிறுவனங்களுக்கு 02 சந்தர்ப்பங்களில் செயல்நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(2) | 430,580 | பணி முடிவடைந்தவுடன் பெற்றுக்கொண்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 17 சந்தர்ப்பங்களில் பணி நிறைவடைந்து 04 மாதங்களுக்கு மேற்பட்ட கால தாமதத்தின் பின்னர் உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iii) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) | 1,180,000 சந்தர்ப்பமொன்றில் வழங்கக்கூடிய ஆகக்கூடிய செயல்நிமித்த உப கட்டுநிதி எல்லை ரூபா 100,000 ஆன போதிலும், அந்த எல்லையினை 5 சந்தர்ப்பங்களில் விஞ்சி செயல்நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. |

## 3.6 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதீப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

### 3.6.1 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள் (நோக்கத்திற்கு புறம்பாதல் போன்றன)

திணைக்களம் தனது நோக்கங்களுக்குரிய பணிகளிலிருந்து விலகிச் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**(அ) டீ.வீ.பீ.விஜேசிங்ஹ தஹாம் செவன நம்பிக்கைப் பொறுப்பு**

கல்கிஸ்ஸவில் வசித்துவந்த டீ.ஜீ.டபிள்யூ விஜேசிங்க அவர்களால் பொது நம்பிக்கைப் பொறுப்பினை பாதுகாவலராக பெயரிட்டு ரூபா 25,000 தொகையான ஆரம்பத் தொகையொன்று மற்றும் பானந்துரை பிரதேசத்தில் அமைந்துள்ள 37.5 பேர்ச் பரப்பளவான காணியொன்றினை சுவீகரித்து 2013 சனவரி 31 ஆந் திகதி ''டீ.வீ.பீ.விஜேசிங்க தஹாம் செவன'' எனும் பெயரிலான நம்பிக்கைப் பொறுப்பொன்று தாபிக்கப்பட்டிருந்தது. இதன் நோக்கமாக மொஹனி சஸ்னே வீரஸ்திதிக்காக தர்ம நிலையமொன்றினை தாபித்தல் மற்றும் அதனை நடாத்திச் செல்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i)** 2014 திசெம்பர் 11 ஆந் திகதி இந்தக் காணி பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்கு சட்டரீதியாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கு முன்னர் 2014 யூன் 18 ஆந் திகதி இந்தக் கட்டிடம் டீ.வீ.பீ விஜேசிங்ஹ நம்பிக்கைப் பொறுப்பிற்குரிய காணியொன்றாக குறிப்பிட்டு, அதில் சில்மாதா ஆராமையொன்றினை நிர்மாணிப்பதற்கு நீதிமன்றத்தின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. நீதிமன்றத்தில் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் நம்பிக்கைப் பொறுப்பிற்கு உரித்தற்ற காணியொன்று நம்பிக்கைப் பொறுப்பிற்கு உரித்தான காணியொன்றாக குறிப்பிடப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக அவதானிக்கப்பட்டது.

**(ii)** நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நம்பிக்கைப் பொறுப்பின் நிதியினை ஈடுபடுத்த கூடாததுடன், அதன் வட்டித் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டுமென நம்பிக்கைப் பொறுப்பின் உரித்துறுதியில் குறிப்பிடப்பட்டிருந்தது. நம்பிக்கைப் பொறுப்பினை ஆரம்பிக்கும் போது இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 25,000 தொகையான நிதியீட்டத்திலிருந்து

கிடைக்கும் வட்டி போதுமானதா என்பது தொடர்பில் திணைக்களத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(iii)** நம்பிக்கை பொறுப்பு உரித்துறுதியின் 5 ஆம் பந்திக்கமைய நம்பிக்கைப் பொறுப்பின் நடவடிக்கைகள் தொடர்பில் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்காக நம்பிக்கைப் பொறுப்பின் ஸ்தாபகரை தலைவராக உள்ளடக்கி 8 பேரைக் கொண்ட மதியுரைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. எனினும் நம்பிக்கைப் பொறுப்பினால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் போன்ற பணிகளில் அந்த மதியுரை குழுவுடன் இணைந்து செயற்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் எவையும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(iv)** நம்பிக்கை பொறுப்பு உரித்துறுதியின் 21 (ஆ) பந்திக்காக ''இது தனியார் நம்பிக்கைப் பொறுப்பொன்றானமையால் அரசின் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்விற்கு உட்படுத்துதல் ஸ்தாபகரின் அபிலாசையும் எதிர்ப்பார்ப்பும் அல்ல'' எனும் பிரிவொன்று உள்ளடக்கப்பட்டிருத்தல் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்குகின்றனவா என்பது பிரச்சினைக்குரிய விடயமொன்றாகும்.

**(v)** சில்மாதா ஆரமையினை நிர்மாணிக்கும் பணிக்காக யூ.டீ.பீ. த சில்வா பூதலிலிருந்து எவ்வளவு பணத்தை ஈடுபடுத்துவது என்பது தொடர்பில் குறிப்பான திட்டமிடலொன்றில்லாது யூ.டீ.பீ. த சில்வா பூதலின் பணத்தில் ஆராமையினை நிர்மாணிப்பதற்கு நீதிமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

**(ஆ) திருமதி. சாந்தனி ஹேமன்தா பெரேரா அவர்களின் சொத்துக்களின் முகாமைத்தும்**

---

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் 06/2005/எல்ஜீ ஆம் இலக்க வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் 2006 ஒக்தோபர் 04 ஆந் திகதி திருமதி சாந்தனி ஹேமன்தா பெரேரா அவர்களின் நோய் நிலைமை குணமாகும் வரை சிவில் வழக்குகள் ஏற்பாட்டு கோவையின் 39 ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவரது பூதலுக்கான பாதுகாவலராகவும் பிரத்தியேக பாதுகாவலராகவும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், அவரின் பராமரிப்பிற்காக நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்படும் ஒரு தொகை பணத்தை செலவிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i)** 1922 இன் 01 ஆம் இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம் மற்றும் அவற்றிற்குரிய திருத்தங்களுக்கமைய நீதிமன்றங்களில் நியமிக்கப்படும் சந்தர்ப்பங்களில் மனநலம் குன்றியவர்களின் சொத்துக்களின் முகாமையாளராக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் செயற்பட வேண்டும். எனினும் அவ்வாறானதொரு நபரின் தனிப்பட்ட பாதுகாவலராக செயற்படுவதற்கு மேற்படி கட்டளைச் சட்டத்தில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ii)** இந்த ஆதனத்திற்குரிய வீட்டினை பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் அங்கீகாரமின்றி திருமதி சாந்தனி ஹேமந்தா அவர்களின் உறவினரொருவரால் மற்றுமொரு நபருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

**(iii)** 2014 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் இறுதிக் கணக்குகளில் இந்த நம்பிக்கைப் பொறுப்பிற்குரிய கணக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய 2014 ஆம் ஆண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பு இறுதிக் கணக்குகளில் நம்பிக்கைப் பொறுப்பின் பூதல்கள் தொடர்பான சரியான நிலைமைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.6.2 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிராததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**(அ) யூ.டீ.பீ. த சில்வா பூதல்**

**-----------------------------------------**

2010 ஏப்ரல் 01 ஆந் திகதி மரணமடைந்த திரு. யூ.டீ.பீ. த சில்வா அவர்களின் 2001 யூன் 29 ஆந் திகதிய 10821 ஆம் இலக்க இறுதி விருப்பு பத்திரம் மற்றும் 2007 ஏப்ரல் 01 ஆந் திகதிய 99 ஆம் இலக்க கொடிசில் பத்திரத்தினூடாக அவரின் பூதலுக்கான பொறுப்பாளராக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பெயரிடப்பட்டிருந்தார். பண்டாரவளை மாவட்ட நீதிமன்றத்தின் 2010 செப்தம்பர் 08 ஆந் திகதிய புரபேட் அனுமதிப்பத்திரம் ஆகியவற்றின் மூலம் பூதலின் பொறுப்பு மற்றும் நிர்வாகம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i)** பூதலின் நலனாளர்களாக பெயரிடப்பட்டுள்ள இரு பெண்களுக்கு வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 100,000 இனை செலுத்துமாறு இறுதி விருப்பு பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த பணம் போதுமானதாக இல்லாதிருந்தமையால், பூதலின் நிதியீட்டத்துடன் ரூபா 4,500,000 இனை செலவிட்டு வீடொன்றினை கொள்வனவு செய்வதற்கு பூதலின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் 2013 செப்தம்பர் 28 ஆந் திகதி நலனாளிகளின் இணக்கப்பாட்டுடன் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மயிலகஸ்தென்ன, பதுளையில் வீடொன்றினை கொள்வனவு செய்வதற்காக பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தினால் 2014 யூன் 18 ஆந் திகதி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நீதிமன்றத்தின் அங்கீகாரத்தினை பெற்று 2½ வருடங்களுக்கு அண்மிய காலம் கடந்திருந்த போதிலும், வீடு கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ii)** வீடுகளை கொள்வனவு செய்யும் பணிக்காக திணைக்களத்தினால் 7 சந்தர்ப்பங்களில் பூதலின் நிதியீட்டத்துடன் போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் வழக்கறிஞர் கட்டணங்களாக ரூபா 247,274 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணி கணக்காய்வு திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிராமையால் அந்த செலவினங்கள் விளைவற்றுப்போயிருந்தன.

**(iii)** யூ.டீ.பீ. த சில்வா அவர்களின் இறுதி விருப்புப் பத்திரத்தின் 05 C பந்திக்கமைய பூதலின் உரிமையாளர் மரணமடையும் தருவாயில் ஹல்தமுல்ல வீட்டில்

காணப்பட்ட சில தளபாடங்கள் மற்றும் தையல் இயந்திரம் ஆகியவை நலனாளியான வீட்டிலிருந்த பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டியிருந்தது. பூதலின் பொறுப்பாளராக ஹல்தமுல்ல வீட்டில் காணப்பட்ட தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான அறிக்கையொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டமை ஆவணங்களுக்கமைய உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வீட்டில் காணப்பட்ட தளபாடங்கள் மற்றும் தையல் இயந்திரங்கள் வீட்டிலிருந்த பெண்ணுக்கு வழங்கப்பட்டமையை உறுதி செய்யும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(iv)** இந்த பூதலுக்குரிய ஹல்துமுல்லயில் அமைந்துள்ள வீடுகளுக்காக திணைக்களத்தினால் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**(v)** திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த ஆதனங்கள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்கள் மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்களின் பெறுமதி ரூபா 700,000 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த பொருட்கள் தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்பீட்டு அறிக்கையொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

**(vi)** ஆதனப் பட்டியலின் பிரகாரம், ஐக்கிய இராச்சியத்தின் வங்கிகளில் மற்றும் ஏனைய நிறுவனங்களில் நிலவிய காசின் பெறுமதி ரூபா 41,079,003 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆவணங்களை பரீட்சித்த போது ரூபா 50,179,827 தொகையான வைப்புக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதனால் ஆதனங்களின் பட்டியல் தவறானதென்பது அவதானிக்கப்பட்டது.

**(vii)** முதலீட்டு பதிவேட்டின் பிரகாரம், நிலையான வைப்புகளிலுள்ள பெறுமதி ரூபா 110,513,662 ஆன போதிலும், திணைக்களத்தின் கோவைகளுக்கமைய அந்த பெறுமதி ரூபா 58,000,000 ஆக இருந்தது. அதற்கமைய ரூபா 52,513,662 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**(viii)** பூதலிருந்து ரூபா 2,038,430 தொகை வழக்கறிஞர் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 1,809,955 தொகை திணைக்களத்தில் சேவையாற்றிய சட்ட உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதனைப் போன்றே பூதலின் சட்டரீதியான நடவடிக்கைகள் கணக்காய்வு திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன், ஆதனங்களை மதிப்பீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ix)** தரும பணிகளுக்காக பல்வேறு தரப்பினருக்கு பூதலிலிருந்து ரூபா 484,946 செலவிடப்பட்டிருந்த போதிலும், தரும பணிகளுக்கான கொடுப்பனவுகள் பூதல் உரிமையாளரின் நோக்கங்களாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**(x)** பூதலின் கட்டுப்பாடு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டு 6 வருடங்கள் கடந்திருந்த போதிலும், பூதல் உரிமையாளரால் வங்கிகளில் பேணிச் செல்லப்பட்ட காப்பகங்கள் விடுவிக்கப்பட்டு அதிலுள்ள பொருட்கள் அல்லது ஆவணங்கள் தமது பொறுப்பிற்கு எடுக்காமையால் நிலுவை காப்பக கட்டணங்களாக 2013 மற்றும் 2015 ஆகிய வருடங்களில் ரூபா 95,986 தொகையினை செலுத்த நேர்ந்திருந்தது.

**(ஆ) திட்டமிடல்**

----------------

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 9 ஆம் பந்திக்கமைய நம்பிக்கைப் பொறுப்பு/ பூதல் ஆதன முகாமைத்துவத்தின் கீழ் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள 12 விவசாய காணிகளை முகாமை செய்து அவற்றின் வருமானத்தில் ஸ்தாபகரின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அந்த தோட்டங்களில் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 9,784,680 தொகையான இலாபம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், அந்த எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தினை அணிமித்ததாக குறிப்பிடப்பட்டிருக்காததுடன் விவசாய காணிகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் 2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையொன்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையுடையனவாக இருந்தன. கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

**(அ) கம்பளை நகர அபிவிருத்தி மற்றும் குப்பைகளை அகற்றும் பணிகளுக்காக சீன அரசிடமிருந்து பெற்றுக்கொண்ட பணம்**

------------------------------------------------------------------------------------------------------------------

கம்பளை நகர அபிவிருத்தி மற்றும் கழிவு முகாமைத்துவத்தினை முன்னிட்டு சீனாவின் யூனேன் மகாணத்தின் லிங்சேன்ங் (Lingsang) நகர சபையின் தவிசாளருடன் கம்பளை நகரசபையின் முன்னாள் தவிசாளர் 2011 யூலை 07 ஆந் திகதி உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 14 நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு மில்லியன் யுவானை மானியமாக வழங்குவதற்கு அதன் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய 2012 ஒக்தோபர் 19 ஆந் திகதி ஐக்கிய அமெரிக்க டொலர் 159,604.18 அல்லது ரூபா 20,426,675 இலங்கை வங்கியின் டொரிங்டன் கிளையில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அந்த பணத்தில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் பல்வேறு பணிகளுக்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்குரிய பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i)** 1918 இன் 1 மற்றும் 1918 இன் 4 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1917 இன் 9 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் மூலமும், 1931 இன் 11 ஆம் இலக்க, 1938 இன் 59 ஆம் இலக்க மற்றும் 1983 இன் 41 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களினால் திருத்தப்பட்ட 1922 இன் 1 ஆம் இலக்க பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் பணிப்பொறுப்புக்களிடையே இவ்வாறான நகர அபிவிருத்தி செயற்திட்டங்களுடன் தொடர்புறுவதற்கு சாத்தியப்பாடு காணப்படவில்லை.

**(ii)** நிதிப்பிரமாணம் 610 மற்றும் 2011 ஏப்ரல் 21 ஆந் திகதிய MOFP/ERD/2011/01 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு அரசுகளின் நிதி உதவியினைப் பெற்றுக்கொள்ளும் போது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் காண்புரைகளை பின்பற்ற

வேண்டியிருந்தது. எனினும் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் அல்லது இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளாது இரு நாடுகளின் இரு தவிசாளர்களுடன் சர்வதேச உடன்படிக்கையொன்றில் இடை நடுவராக செயற்பட்டிருந்தது.

(iii) கம்பளை நகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய பணம் அந்த நகர சபையின் முன்னாள் தலைவரொருவரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்டு சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கலொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக நட்டஈடு செலுத்துவதற்காக ரூபா 8 மில்லியன் கம்ளை நகர அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவ்வாறானதொரு நட்டஈடு கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) கம்பளை நகர அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து ரூபா ஒரு மில்லியன் 2014 ஆம் ஆண்டின் வெசாக் வலயத்தின் அலங்கார செலவினங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அது சீனா அரசிடமிருந்து பணம் வழங்கப்பட்ட நோக்கத்திற்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது.

(vi) கம்பளை நகர சபை எல்லைக்கு புறம்பாக புஸ்ஸல்லாவ பிரதேசத்தில் வியாபார கட்டிடத் தொகுதியொன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா 10,000,000 தொகை கண்டி நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. வியாபார கட்டிடத்தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டமையும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vii) கம்பளை நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு புறம்பாக புஸ்ஸல்லாவ பிரதேசத்தின் பேருந்து தரிப்பிடத்தை சுற்றிலும் அபிவிருத்தி செய்வதற்காக கம்பளை நகர அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு ரூபா 1,200,000 செலுத்தப்பட்டிருந்தது. பேருந்து தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்தமை உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

(viii) கம்பளை நகர அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்குரிய இலங்கை வங்கியின் பிலியந்தல கிளையின் மூன்று நபர்களின் பெயரில் நடாத்திச் செல்லப்படும் தனிப்பட்ட இணைந்த நடைமுறைக் கணக்கிற்கு மேற்படி (iv), (v) மற்றும் (vii) ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களில் காணப்படும் ரூபா 10.20 மில்லியன் செலவு வைக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய அரச நிதியினை தனிப்பட்ட கணக்கொன்றிற்கு செலவு வைப்பதற்கு சட்டரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ix) கம்பளை நகர சபையினை அபிவிருத்தி செய்வதற்காக சீனா அரசிடமிருந்து பெறப்பட்ட பணத்தினை பயன்படுத்துவதற்காக 2012 யூலை 20 ஆந் திகதி கங்கசிரிபுர டிவளப்மன்ட் டிரஸ்ட் எனும் பெயருடைய ஐஓ/28/2012 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பிற்காக தனியார் தரப்பினரை ஸ்தாபகராகவும், பொது நம்பிக்கைப் பொறுப்பாளரை பாதுகாப்பு பொறுப்பாளராகவும் பெயரிட்டு தாபிக்கப்பட்டிருந்தது. மேலும் 7 நபர்களை கொண்ட நம்பிக்கைப் பொறுப்பு முகாமைத்துவக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. இவற்றுக்கிடையே கம்பளை நகர சபையின் எந்தவொரு அமைச்சரோ உத்தியோகத்தரோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய கங்கசிறிபுர நகர அபிவிருத்தி

நம்பிக்கைப் பொறுப்பு கம்பனை நகரின் அபிவிருத்திக்காக தாபிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படாததுடன், அவ்வாறானதொரு நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் ரூபா 20,200,000 ஆன செலவினமொன்றை மேற்கொண்டமை சர்ச்சைக்குரியதாக அவதானிக்கப்பட்டது.

**(x)** கம்பளை நகர அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் இலங்கை வங்கியின் பிலியந்தல கிளையில் கம்பளை நகர அபிவிருத்தி நம்பிக்கைப்பொறுப்பு எனும் பெயரிலான நிலையான வைப்புக் கணக்கொன்றில் ரூபா 80 இலட்சம் வைப்புச் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதனால் சீன அரசிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த பணம் தொடர்பில் ஏதேனும் முறைகேடு இடம்பெற்றிருக்கவில்லை என்பதை உறுதி செய்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## (ஆ) திரு. சிசில் அர்னஸ்ட் வனிகசூரிய பூதல் தொடர்பான கணக்காய்வு

1503 ஆம் இலக்க இறுதி விருப்புப் பத்திரம் மற்றும் 1799 ஆம் இலக்க கொடிசில் பத்திரத்தின் மூலம் தமது சொத்துக்கள் தொடர்பில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரை பாதுகாவலராக நியமித்து இறுதி விருப்பு பத்திரத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ''சிசில் வனிகசூரிய நம்பிக்கைப் பொறுப்பு'' எனும் பெயரிலான நம்பிக்கைப் பொறுப்பொன்றினை தாபித்து நடாத்திச் செல்லுமாறு குறிப்பிட்டு, 1999 நவம்பர் 28 ஆந் திகதி மரணமடைந்த கொழும்பு 6 இல் வசிக்கும் சிசில் ஆர்னஸ்ட் வனிகசூரிய அவர்களின் பூதல் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் கையேற்கப்பட்டிருந்தது. ஆதனங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் அனைத்து பணத்தையும் ''சிசில் வனிகசூரிய'' எனும் பெயரில் நம்பிக்கைப் பொறுப்பொன்றினை திறந்து அதில் வைப்புச் செய்யப்பட வேண்டியதாக இருந்தது. அவ்வாறே அந்த நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் இறுதி விருப்புப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி உதவிகள், புண்ணிய பணிகளுக்கான உதவிகள் மற்றும் மருத்துவ உதவிகளை மேற்கொள்ளல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுதல் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேற்படி அசையாத சொத்துக்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

**(i)** 1999 நவம்பர் 23 ஆந் திகதிய 1799 ஆம் இலக்க கொடிசில் பத்திரத்திற்கமைய வெல்லவத்த புகையிரத நிலைய குறுக்கு வீதியில் அமைந்துள்ள காணிகள் மற்றும் ஆதனங்கள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டு 6 வருடங்கள் கடந்ததன் பின்னர் அந்த அந்த ஆதனங்கள் ரூபா 79 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. ஆதனங்களை விற்பனை செய்து 4 வருடங்கள் கடந்திருந்த போதிலும், நம்பிக்கைப் பொறுப்பின் பெயரில் அந்த பணம் முதலீடு செய்யப்படாது திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பபட்டிருந்தது. அதற்கமைய கணக்காய்வு திகதியளவில் அச் சொத்துக்களை திணைக்களத்திற்கு ஒப்படைத்து 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும், பூதல் உரிமையாளரின் இறுதி விருப்புப் பத்திரத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்த ஆதனங்களைவ விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட பணம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ii)** திரு. சிசில் அர்னஸ்ட் வனிகசூரிய அவர்களின் பூதலுக்குரிய கொலன்னாவ நகரசபை எல்லையில் அமைந்துள்ள சேதவத்தையில் 3 ஏக்கர்கள், 2 ரூட், 10.81 பேர்ச் அளவான காணி, 1711 ஆம் இலக்க உரித்துறுதியின் மூலம் மரணமடைந்த சீ.ஈ

வனிகசூரிய அவர்களால் 1997 செப்தம்பர் 26 அந் திகதி விற்பனை செய்யப்பட்டுள்ளதாக ஆவணங்களில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இறுதி விருப்புப் பத்திரத்தில் உள்ளடங்கியுள்ள ஆதனமொன்றினை விற்பனை செய்தல் மற்றும் அவ்வாறு விற்பனை செய்து பெற்றுக்கொண்ட பணத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(iii)** இறுதி விருப்புப் பத்திரத்தின் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களுக்கு மேலதிகமாக மரணமடைந்த சீ.ஈ.வனிகசூரிய அவர்களுக்கு சொந்தமானதாக சேதவத்தையில் காணப்பட்ட வெற்றுக் காணியொன்றை ரூபா 9,043,935 இற்கு விற்பனை செய்து பெறப்பட்ட பணம் 1210/00T ஆம் இலக்க வழக்கின் ஆதனப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அந்தப் பணத்தை திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்ளல் மற்றும் சிசில் வனிகசூரிய பூதல் கணக்கிற்கு கணக்கு வைத்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(iv)** திரு.சீ.ஈ.வனிகசூரிய அவர்கள் மரணமடைவதற்கு முன்னர் இரு பிரிவுகளின் கீழ் பகுதிகளாக்கப்பட்டு திட்டங்களை தயாரித்து விற்பனை செய்வதற்காக கடவத்தை, தனியார் ஏலதாரரொருவருக்கு கையளிக்கப்பட்டிருந்த கடவத்த, மிரிஸ்வத்த ஊருலிங்கன்ன எனும் பெயரிலான காணியில் விற்பனை செய்யாது எஞ்சியுள்ள 01 ஏக்கர் 4 ரூட் 38 பேர்ச் அளவான காணியானது இறுதி விருப்பு பத்திரத்திற்கமைய மீண்டும் விற்பனை செய்யப்பட்டு அந்த பணம் நம்பிக்கைப் பொறுப்பின் பெயரில் வைப்புச்செய்யப்பட வேண்டும். எனினும் 2009 யூன் 02 ஆந் திகதி கல்கிஸ்ஸ மாவட்ட நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட அனுமதியினை மீறி 778 A ஆம் இலக்க அளவீட்டுத் திட்டத்தில் விற்பனை செய்யாது எஞ்சிய 01 ஏக்கர் 2 ரூட் 24 பேர்ச் பளப்பளவான காணியை இராணுவ வீரர்களுக்கு வழங்குவதற்காக அரச பாதுகாப்ப, பொதுமக்களின் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு காணிகளை ஒப்படைக்கும் போது பூதல் உரிமையாளரின் நோக்கங்களுடன் இணங்குவதாக உறுதிப்படுத்துவதற்கு போதுமானதான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(v)** விற்பனை செய்வதற்காக கையளிக்கப்பட்ட 30 பேர்ச் பரப்பளவான 152/1988 ஆம் இலக்க அளவீட்டுத் திட்டத்தில் துண்டு இலக்கம் 3 மற்றும் துண்டு இலக்கம் 4 உம், 778/A அளவீட்டு திட்டத்தில் கற்பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளன. 64 பேர்ச் பரப்பளவான காணியும் தொடர்ந்தும் எஞ்சியிருந்த போதும், அந்த 3 காணித்துண்டுகளையும் விற்பனை செய்த பணத்தை பூதலுக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(vi)** இறுதி விருப்புப்பத்திரத்தின் 5(iii) மற்றும் (iv) ஆம் பந்திகளின் கீழான மற்றும் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் 33485/T ஆம் இலக்க வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அட்ரோனி அனுமதிப்பத்திரத்தின் மூலம் மரணமடைந்த சீ.ஈ.வனிகசூரிய அவர்களுக்கு சொந்தமான 4 இடங்களில் அமைந்துள்ள 03 ஏக்கர் 03 ரூட் 8 பேர்ச் அளவான காணியும், 02 இடங்களில் அமைந்துள்ள காணிகளின் அளவானது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிர்ணயிக்கப்பட்டிராத ஆதனங்களும், கொலன்னாவ நகரசபை எல்லையினுள் அமைந்துள்ள சேதவத்தையில் காணப்படும் காணிகள் தொடர்பிலும் புரோபேட் அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெற்று 11 வருடங்கள் கடந்திருந்தது. எனினும், அந்த ஆதனங்களை விற்பனை செய்து, அந்த பணத்தை சிசில் வனிகசூரிய நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலவு வைப்பதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(vii)** 2007 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சீ.ஈ.வனிகசூரிய பூதலுக்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் தயாரிக்கப்பட்ட ஐந்தொகையில் அத் திகதியில் உள்ளபடியான மொத்த சொத்துக்கள் ரூபா 98,182,155 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் மதிப்பிடப்பட்ட ஆதனப் பட்டியலுக்கமைய மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 111,246,658 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய மேற்படி ஆதனப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி மற்றும் 2007 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்டு கோவைப்படுத்தப்பட்டிருந்த ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 13,064,503 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**(viii)** இறுதி விருப்புப் பத்திரத்தின் 9 ஆம் பந்தியில் குறிபிடப்பட்டுள்ளவாறும் இலண்டனில் அமைந்துள்ள இரு வங்கிகளில் சீ.ஈ.வனிகசூரிய பூதுலுக்கு பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக இறுதி விருப்புப் பத்திரத்தின் 9 ஆம் பந்தியில் எதிர்பார்க்கப்பட்ட அந்த பணம் இலண்டனிலுள்ள பௌத்த விஹாரையின் மஹா போதி சங்கத்திற்கு வழங்கும் நோக்கம் மீளாய்வாண்டு வரையிலும் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சீ.ஈ.வனிகசூரிய பூதலுக்குரிய அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கணக்குகளும் இனங்காணப்பட்டிருந்தமையும், அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிக் கணக்குகளிலும் நிலவிய பணம் உரிய வட்டித் தொகையுடன் சீ.ஈ.வனிகசூரிய பூதல் எனும் பெயரில் கணக்கு வைக்கப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்துவதற்குரிய கணக்காய்வு சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ix)** 2007 ஆகஸ்ட் மாதத்தின் போது தயாரிக்கப்பட்டிருந்த ஆதனப் பட்டியலின் பிரகாரம் சீ.ஈ.வனிகசூரிய பூதலுக்கு சொந்தமாக ரூபா 683,950 பெறுமதியான தளபாடங்கள் இனங்காணப்பட்டிருந்தன. திணைக்களத்தினால் உரிய அவதானம் மற்றும் கவனம் செலுத்தப்படாமையால் தளபாடங்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள் துருப்பிடித்து பெறுமதியிலான குறைவொன்று ஏற்பட்டிருந்தது.

**(இ) சௌவிரத்ன மருத்துவ உதவி நிதிய நம்பிக்கை பொறுப்பு**

2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவியினை வகித்தவர்களை பொறுப்பாளர்களாக பெயரிட்டு அவரின் மனைவியால் ரூபா 25,000 தொகையான மூலதனம் ஈடுபடுத்தப்பட்டு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி சௌவிரத்ன மருத்துவ உதவி நிதிய நம்பிக்கைப் பொறுப்பு எனும் பெயரிலான நம்பிக்கைப் பொறுப்பொன்று தாபிக்கப்பட்டிருந்தது. அந்த நிதியத்தின் நோக்கங்களாக அந்த பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு மருத்துவ சிகிச்சைகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டுள்ள சமூக சேவைகள் மற்றும் பொது நிதியங்களின் நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களுக்கு இணங்க மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மருத்துவ வசதிகளுக்காக செலுத்தப்பட்டிருந்த மற்றும் எதிர்காலத்தில் செலுத்த நேரிடும் மருத்துவமனை கட்டணங்களுக்காக செலவிடப்பட்ட பணத்தை மீளளிப்பு செய்தல் மற்றும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் பெற்றோருக்காக வருடாந்தம் புண்ணிய நிகழ்வுகளை நடாத்தி அவர்களுக்கு புண்ணியம் சேர்த்தல் போன்றன குறிப்பிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியளவில் இந்த நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து ரூபா 3,569,712 மற்றும் ஏனைய நம்பிக்கைப் பொறுப்பு பூதல்களிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i)** பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்திலுள்ள சமூக சேவைகள் மற்றும் பொது நிதியங்கள் நம்பிக்கைப் பொறுப்பினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், செனவிரத்ன அவர்களின் மருத்துவ உதவிகளுக்காக செலுத்தப்பட்டிருந்த மற்றும் எதிர்காலத்தில் செலுத்த நேரிடக்கூடிய மருத்துவ கட்டணப் பட்டியல்களை மீளளிப்பு செய்தல் இந்த நம்பிக்கைப் பொறுப்பினை தாபிப்பதற்கான நோக்கங்களாக நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியின் 6(ஆ) மற்றும் 12 (ஈ) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் சமூக சேவைகள் மற்றும் பொது நிதிய நம்பிக்கைப் பொறுப்பில் செனவிரத்ன அவர்களின் மருத்துவ உதவிகளுக்காக செலுத்தப்பட்டிருந்த எந்தவொரு பட்டியலும் இந்த நம்பிக்கைப் பொறுப்பினால் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேற்படி நம்பிக்கைப் பொறுப்பினை தாபிப்பதற்கு முன்பு மற்றும் பின்னர் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் ''சமூக சேவைகள் மற்றும் பொது நிதியங்கள் நம்பிக்கைப் பொறுப்பின்'' என்.எஸ்.ஏ.எஸ். செனவிரத்ன அவர்களுக்கான மருத்துவப் பட்டியல்களை தீர்ப்பனவு செய்தல் தொடர்பில் திணைக்களத்தினால் பதிவுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ii)** நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியின் 16 ஆம் பிரிவிற்கமைய மூலதனத்திற்கு கிடைக்கும் வட்டி வருமானத்தில் 25 சதவீதம் மீண்டும் முதலீடு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. நம்பிக்கைப் பொறுப்பிற்காக ரூபா 1,500,000 தொகையான நிலையான வைப்பொன்று ஸ்தாபகரால் மூலதனமாக 2014 சனவரி 21 ஆந் திகதி வைப்புச் செய்யப்பட்ட போதிலும், 2014 யூலை வரையிலும் அதன் வட்டி வருமானம் மற்றும் மூலதனத்தை விஞ்சி ரூபா 1,069,712 செலவிடப்பட்டிருந்தது.

**(iii)** ''இது தனியார் நம்பிக்கை பொறுப்பொன்றானமையால் அரசின் கணக்காய்வு பிரிவினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்படல் நிறுவுநரின் அபிலாசை மற்றும் எதிர்பார்ப்பன்று'' என நம்பிக்கைப் பொறுப்பின் உரித்துறுதியின் 18 (இ) பிரிவில் பதிவு செய்தமையின் மூலம் கணக்காய்வு விடயப்பரப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**(iv)** முன்னாள் நம்பிக்கைப் பொறுப்பாளரின் மருத்துவ செலவிங்களை தீர்ப்பதற்காக அவரின் மனைவி நிறுவுநராக முன்வந்து ஆரம்பித்திருந்த இந்த நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் தமது மருத்துவ பட்டியல்களை தீர்ப்பதற்காக மூலதனத்தை விஞ்சும் வகையில் அங்கீகாரமின்றி செலிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) திருமதி புளோரன்ஸ் ஈநிட் விதம் அவர்களின் பூதல்**

1968 ஆகஸ்ட் 11 ஆந் திகதி சிங்கப்பூரில் காலஞ்சென்ற திருமதி புளோரன்ஸ் ஈநிட் விதம் அவர்களால் இலங்கையின் 3 இடங்களில் அமைந்துள்ள கூட்டுத்தொகை 3 ரூட் 35.8 பேர்ச் அளவான காணி மற்றும் காணிகளில் அமைந்திருந்த 3 வீட்டுக்கட்டிடங்களை விற்பனை செய்து கிடைக்கும் பணமும், தனியார் வங்கியொன்றில் நிலவிய ரூபா 54,476 தொகையும் உரித்தாளர்களுக்கு/ நலனாளிகளுக்கு வழங்குவதற்காக அற்றோனி அதிகாரம் பெற்றவராக இலங்கை பொது நம்பிக்கைப் பொறுப்பாளரை 1975 ஆம் ஆண்டின் போது பெயரிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i)** கொழும்பு 05 இல் அமைந்துள்ள 01 ரூட் 5 பேர்ச் பரப்பளவான காணி மற்றும் வீடுகளை விற்பனை செய்வதற்காக 2004 செப்தம்பர் 27 ஆம் திகதி பத்திரிக்கை அறிவித்தலொன்றின் மூலம் கேள்வி கோரப்பட்டிருந்தது. கேள்வி கோரல்

அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் உரித்தாளரொருவர் ஆதனத்தில் குடியிருந்ததுடன், குடியிருப்பாளர்களை அகற்றி பூரணமான உரித்தினை பெற்றுக்கொள்ளல் விலைக்கேள்வியாளரின் பொறுப்பொன்றாகும் என்பதும், அது தொடர்பில் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் பொறுப்புக்கூறாது எனவும் கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**(ii)** இந்த ஆதனங்களை விற்பனை செய்வதற்காக நியமித்த விலைக்கேள்வி குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களாக இருந்தமையால் விலைக்கேள்வி குழுவின் சேர்க்கை மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பில் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

**(iii)** இதற்காக 04 கேள்விதாரர்கள் கூறுவிலைகளை சமர்ப்பித்ததுடன், பொது நம்பிக்கைப் பொறுப்பாளர், நிதிப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், நம்பிக்கைப் பொறுப்பு உத்தியோகத்தர் ஆகிய பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் 04 உத்தியோகத்தர்களை கொண்ட விலைக்கேள்வி குழுவொன்றின் மூலம் கேள்வி திறத்தல் மற்றும் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு ரூபா 50,511,000 தொகையான ஆகக்கூடிய கூறுவிலைகளை சமர்ப்பித்த கேள்விதாரர்களுக்கு 2004 ஒக்தோபர் 22 ஆந் திகதி கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. முற்பணமாக ரூபா 1,000,000 தொகை 14 நாட்களுக்குள் செலுத்தப்பட்டதன் பின்னர் காணிகளை ஒப்படைப்பதற்கான பணிகளை மேற்கொள்வதாக மாத்திரம் கேள்வி கையளிப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்காக கொள்வனவாளருடன் ஆதனங்களை விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**(iv)** விற்பனை செய்யப்பட்ட ஆதனங்களுக்காக பணம் செலுத்துதல் கேள்வி பெறுநரால் புறக்கணிக்கப்பட்டிருந்ததுடன், சுமார் 06 வருட நீண்ட காலமாக ஒரு வருடத்திற்கு ஒரு முறை 06 சந்தர்ப்பங்களில் பணம் செலுத்துவதற்காக காலம் கோரப்பட்டிருந்தது. அந்த அனைத்து கால நீடிப்புகளுக்காகவும் முன்னாள் நம்பிக்கைப் பொறுப்பாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு கேள்வியினை இரத்தாகாமல் நடவடிக்கை எடுத்தல் மற்றும் காசு செலுத்துவதற்கு நீண்ட காலம் தாமதிப்பதற்கான அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

**(v)** கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காலப்பகுதியினுள் அல்லது 2007 மார்ச் 15 ஆம் திகதி கேள்விதாரரால் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு கடிதமொன்றை சமர்ப்பித்து, 01 பேர்ச் ரூபா 1,800,000 படி 38.37 பேர்ச் பரப்பளவான மொத்த ஆதனமும் ரூபா 69,066,000 தொகைக்கு கொள்வனவு செய்ய விருப்பமென்பதை தெரிவித்து மீண்டும் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த காலப்பகுதியினுள் இந்த ஆதனத்தை கொள்வனவு செய்வதற்காக மேலும் 05 கொள்வனவாளர்கள் கடிதத்தின் மூலம் விலைக்கேள்வி கையளிக்கப்பட்டவரின் கூறுவிலைகளை விட கூடுதலான கூறுவிலைகளை முன்வைத்திருந்தனர்.

**(vi)** கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் மற்றும் பின்னர் கடிதமொன்றின் மூலம் அவர் சமர்ப்பித்த கூறுவிலைகள் தொடர்பில் இணங்கவில்லை என்பதும், இந்த ஆதனங்கள் அந்த விலைகளை விட அதிகமான பெறுமதியானவை எனவும், தற்போது சமர்ப்பிக்கப்பட்ட ஆகக்கூடிய கூறுவிலைகளுக்கமைய ரூபா 77,123,700 இற்கு ஆகக் குறைந்தது விற்பனை செய்ய முடியுமெனவும், ஆதனத்தின் உரிமையாளர்களால் முன்னால் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கான பிரதிநிதி முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், அவர் அதற்கு எந்தவொரு பதிலையும் வழங்கியிருக்கவில்லை.

**(vii)** இந்த சிக்கலான நிலைமை தொடர்பில் 2007 யூலை 31 ஆந் திகதி சட்ட மா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டிருந்தது. கேள்விதாரர் பணம் செலுத்த தவறியமையால் அதற்காக கால அவகாசம் வழங்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவு மேற்கொள்ளாமையாலும் மீண்டும் கூடுதலான கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தமையாலும் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய விலைக்கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிராமையின் அடிப்படையில் அவருக்கு ஆதனங்களை விற்பனை செய்வதற்கான இணக்கப்பாடொன்று இல்லாதிருந்தமையும், கூடுதலான விலைக்கு ஆனதங்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதன் உரித்தாளர்களுக்கு கூடுதலான நலன் கிடைக்கும் வகையில் செயற்பட வேண்டுமென சட்டமா அதிபரால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பில் பிரதானமாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு விடயங்களை முன்வைக்குமாறு பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய முன்னாள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு 2008 செப்தம்பர் 17 ஆந் திகதி முறைப்பாடொன்றின் மூலம் மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு, அல்லது ரூபா 69,066,000 இற்கு கொள்வனவு செய்வதற்கு கேள்விதாரர் இணங்கியுள்ளதாகவும், அந்த கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்த ஆகக்கூடிய விலையெனவும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 04 கொள்வனவாளர்களால் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஆகக்கூடிய கூறுவிலைகள் தொடர்பான விடயங்கள் முன்வைக்கப்பட்டிராத காரணத்தால் குறித்த ஆதனங்கள் ரூபா 69,066,000 தொகையான பணத்திற்கு கேள்விதாரர்களுக்கு விற்பனை செய்வதற்கு மாவட்ட நீதிமன்றத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

**(viii)** இந்த ஆதனங்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த ரூபா 69,066,000 தொகையில் ரூபா 25,615,209 தொகை உரித்தாளர்கள் மற்றும் 20 நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. பணத்தை பெற்றுக்கொண்ட நலனாளிகள் இந்த ஆதனத்தின் சரியான உரித்தாளர்களென்பதை சான்றுபடுத்தும் சாட்சிகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஆதனத்தின் அட்றோனி அதிகாரம் பெற்றவராக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பெயரிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அல்லது 1975 ஆம் ஆண்டின் போது ஆதனத்திற்கு 08 உரித்தாளர்கள் மாத்திரம் காணப்பட்ட போதிலும், நீண்ட காலமான தாமதத்தின் அடிப்படையில் தற்போது இனங்காணப்பட்டவாறு 46 உரித்தாளர்கள் வரை அதிகரித்திருந்தது. அதற்கமைய பணம் செலுத்தும் போது அந்த விடயங்களை கருத்திற் கொள்ள வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ix)** ஆதனங்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த பணத்தில் 20 நலனாளிகளுக்கு செலுத்தி எஞ்சியிருந்த ரூபா 43,450,791 தொகையான பணம் 2016 சனவரி 31 ஆந் திகதியளவில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், ஏனைய உரித்தாளர்களுக்கு / பயனாளிகளுக்கு செலுத்தப்படடிருக்கவில்லை. அதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**(x)** இந்த செலுத்தப்படாத பணத்தை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தல் திணைக்களத்தினுள் நடைமுறையிலுள்ள முறைமையொன்றான போதிலும், 2015 யூன் 02 ஆந் திகதி ரூபா 1,000,000 தொகையான பணம் மாத்திரம் அவ்வாறு முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(xi) ஆதனங்களை விற்பனை செய்தமையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் முதலீடு செய்யப்படாமையால், வங்கிக் கணக்குகளில் காணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறல்லாது ஏனைய நம்பிக்கை பொறுப்பு நிதியங்களிலும் பூதல்களினதும் கொடுப்பனவுகளுக்காக அந்த பணம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(xii) கொழும்பு 05, கிளாசன் பிளேஸில் அமைந்துள்ள 01 ரூட், 05.94 பேர்ச் கன அடி கொண்ட ஆதனத்தை விற்பனை செய்யும் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்திகதியளவில் இந்த ஆதனங்களை விற்பனை செய்வதற்காக 40 வருடங்களுக்கும் அதிகமான நீண்ட காலப்பகுதி கடந்திருந்தது.

(xiii) காணியை விற்பனை செய்வதற்கு முன்னர் காணியின் பெறுமதியினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக விலைமதிப்புத் திணைக்களத்திடமிருந்து அரசின் மதிப்பீட்டு அறிக்கையொன்றினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

### 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றிருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**(அ) சமய மற்றும் சமூகசேவைகள் பொது நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினை தாபித்தல் மற்றும் செலவினங்களை மேற்கொள்ளல்**

பிரதமர் மற்றும் உரிய வரிசை அமைச்சரால் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் பணிகளை பரிசோதனை செய்வதற்காக 2005 பெப்ரவரி 17 ஆந் திகதி மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவினால் ''பொது முதலீட்டுக் கணக்கிற்கு'' சட்டரீதியான அடிப்படையொன்றினை வழங்க வேண்டுமென்ற பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் ''சமய மற்றும் சமூக சேவைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்'' எனும் பெயரில் பிரிதொரு நிதியத்தினை தாபிப்பதற்கு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக 2010 பெப்ரவரி 16 ஆந் திகதி பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அத் திகதியின் பின்னரும் நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு திருத்தங்கள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக கொழும்பு மாவட்ட நீதிபதியால் 2010 யூலை 16 மற்றும் 2010 ஆகஸ்ட் 11 ஆகிய திகதிகளில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. திணைக்களத்தில் காணப்பட்ட ''பொது முதலீட்டு வட்டிக் கணக்கிலிருந்து'' ரூபா 10 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டு சமய மற்றும் சமூக சேவைகள் பொது நம்பிக்கை பொறுப்பு நிதியம் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பிரதமரால் நியமிக்கப்பட்டிருந்த மூவரடங்கிய குழுவின் பரிந்துரை இலக்கம் 02 இன் பிரகாரம், பொது முதலீட்டுக் கணக்கொன்றை ஏற்படுத்துவதற்கான விதியொன்றினை உள்ளடக்குதல் அல்லது அதனை விட அதிகமான சட்டரீதியான அதிகாரங்கள் தேவைப்படுமாயின், பிரதான அதிகாரச்சட்டத்திற்கு பிரிவொன்றினை சேர்ப்பதற்கும் சட்ட மா அதிபரின் ஆலோசனைகளை பெற உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், குழுவின் முற்மொழிவிற்கமைய செயற்படாது பொது முதலீட்டுக் கணக்கிற்கு சட்டரீதியான அடிப்படையொன்றினை வழங்க வேண்டுமென குழு பரிந்துரை செய்திருந்த போதிலும், முன்னாள் நம்பிக்கைப்

பொறுப்பாளரால் அவ்வாறு செயற்படாது சமய மற்றும் சமூக சேவைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் எனும் பெயரிலான பிரிதொரு நிதியத்தினை தாபிப்பதற்கு அனுமதி கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் முறையீடொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

**(ii)** பொது நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரம், பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது அவரால் நியமிக்கப்படும் நபரொருவரால் நம்பிக்கைப் பொறுப்புகளின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டு, நம்பிக்கைப் பொறுப்பினால் பயனடையும் அனைத்து தரப்பினருக்கும் அந்த கணக்குகளை வழங்க வேண்டிய போதிலும், சமய மற்றும் சமூக சேவைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பில் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

**(iii)** பொது நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவிற்கமைய இனங்காண முடியாத 12 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக திரண்டு காணப்படும் நிதியங்கள் அரசின் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மேற்படி நம்பிக்கை பொறுப்பு தொடர்பில் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

**(iv)** இந்த நம்பிக்கை பொறுப்பினை நிறுவி நடாத்திச் செல்லல் சட்ட விரோதமானது என்பதால், அந்த நம்பிக்கைப் பொறுப்பினை இரத்துச் செய்தல் தொடர்பில் 2015 செப்தம்பர் 03 ஆம் திகதி பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் சட்ட மா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டிருந்தது. அதன் போது இவ்வாறானதொரு நம்பிக்கைப் பொறுப்பினை நிறுவுவதற்கு நீதிமன்றத்தின் அங்கீகாரம் கோருவதற்கான சட்ட ரீதியான அதிகாரமொன்று பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு இல்லை என்பது, 2015 நவம்பர் 03 ஆந் திகதி சட்ட மா அதிபரால் அறிவிக்கப்பட்டிருந்தது. சட்ட மா அதிபரின் அபிப்பிராயத்திற்கமைய மேற்படி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சட்ட ரீதியான தன்மை நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்பட்டு, இந்த நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பில் நீதிமன்ற உத்தரவினை பெற்றுக்கொள்வதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நீதிமன்றத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(v)** மேற்படி நம்பிக்கைப் பொறுப்பின் பெயரில் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 10,000,000 மற்றும் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 5,000,000 முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த முதலீட்டிற்காக வட்டி வருமானமாக 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 5,090,415 தொகையும், ஏனைய வருமானமாக ரூபா 13,311,344 தொகையும், பொது முதலீட்டு வட்டிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய வருமானம் 81,567,732 தொகையும் இந்த காலப்பகுதிக்கு உரியதாக சமய மற்றும் சமூக சேவைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலவு வைக்கப்பட வேண்டியதாக காணப்பட்டது. அதற்கமைய ரூபா 99,969,491 கூட்டுத்தொகையான வருமானம் இந்த நம்பிக்கைப் பொறுப்பிற்கு கிடைத்திருந்தது. சமய மற்றும் சமூக சேவைகள் மற்றும் பொது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மேற்படி பணத்தை பயன்படுத்தி 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் ரூபா 412,183,640 செலவிடப்பட்டு நம்பிக்கைப் பொறுப்பில் பாதகமான மீதியொன்று ஏற்படும் வகையில் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே நம்பிக்கைப் பொறுப்பின் உரித்துறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு முரணாக தரும காரியங்கள் அல்லாத ஊழியர் ஊதியர், போக்குவரத்து செலவினம், எரிபொருள் செலவினம் மற்றும் நலன்புரி செலவினம் போன்ற

செலவினங்களுக்காக ஐந்து வருடங்களினுள் ரூபா 46,352,238 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**நாரஹேன்பிட்ட ஸ்ரீ அபயாராம விகாரைக்கு நட்டஈடு செலுத்துதல்**

திம்பிரிகஸ்யாய வீதியினை அகலப்படுத்துவதற்காக மேற்படி விகாரையின் காணிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 33,360,000 தொகையான நட்டஈடு 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நட்டஈட்டுத் தொகையில் ஒரு பகுதியான ரூபா 15,000,000 மீண்டும் நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்தி பணிகளுக்காக என குறிப்பிட்டு ஸ்ரீ அபயாராம விகாரையின் தங்கியிருக்கும் மதகுருவின் வேண்டுகோளுக்கமைய 2007 திசெம்பர் 06 ஆந் திகதி அந்த மதகுருவிற்கு பொது நம்பிக்கைப் பொறுப்பு திணைக்களத்தால் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i)** முன்னாள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் 1931 இன் 19 ஆம் இலக்க பௌத்த விகாரைகள் தேவாலகம் அதிகாரச்சட்டத்தின் 21 மற்றும் 25 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பௌத்த விவகாரங்கள் ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது நாரஹேன்பிட்ட ஸ்ரீ அபயராம விகாரையின் விஹாராதிபதி மதகுருவல்லாத பௌத்த துறவியொருவருக்கு ரூபா 15,000,000 தொகையான இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது.

**(ii)** மேற்படி நட்டஈடு தொகைகளை விடுவிப்பதற்காக விஹாரையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குரிய செலவின மதிப்பீடுகள், பொறியியல் மதிப்பீடுகள், பொறியியல் திட்டங்கள் போன்ற ஆவணங்கள் பௌத்த அலுவல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(iii)** இந்த நட்டஈட்டு தொகையினை பயன்படுத்தி விஹாரையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்துவதற்குரிய எந்தவொரு சான்றும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிராததுடன், மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பில் எதுவித பரிசோதனையோ பின்தொடர் நடவடிக்கைகளோ முன்னாள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(iv)** நட்டஈட்டு தொகைகளை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தமையால் 2015 பெப்ரவரி 09 ஆந் திகதியளவில் வட்டியாக ரூபா 24,876,740 தொகை கிடைத்திருந்தது. எனினும் ரூபா 34,108,952 தொகை விஹாரையில் வசிக்கும் பௌத்த பிக்குவிற்கு சட்டரீதியற்ற ரூபா 9,232,212 தொகையான கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே விஹாரையின் அபிவிருத்தி பணியல்லாத வழக்கு நடவடிக்கைகளுக்கான வழக்கறிஞர் கட்டணங்களுக்காக ரூபா 339,000 தொகை அந்த விஹாரையில் வசிக்கும் பௌத்த பிக்குவிற்கு செலுத்தப்பட்டிருந்தது. அதற்காக திணைக்களத்தின் ஏனைய நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்கள் மற்றும் பூதல்களின் நிதியங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(v)** இந்த விடயத்துடன் தொடர்புடைய ரூபா 1,750,000 கூட்டுத்தொகையான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை அங்கீகரித்தல் மற்றும் சான்றுபடுத்தல் ஆகிய

இரு பணிகளும் நிதிப்பிரமாணம் 136 மற்றும் 137 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உள்ளக பரிசோதனை தொடர்பில் கவனம் செலுத்தாது, முன்னாள் பொது நம்பிக்கை பொறுப்பாளரால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.9 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வெளிநாட்டு நட்டஈடு செலுத்தல் கணக்காய்வு

1988 இன் 61 ஆம் இலக்க திருத்தப்பட்ட பொது நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் 10(அ) பிரிவிற்கமைய, வெளிநாட்டில் பணிபுரிந்த பல்வேறு காரணங்களினால் மரணமடையும் பணியாளர்களுக்காக கிடைக்கும் இழப்பீட்டுப் பணம், செலுத்தப்படாத சம்பளம் மற்றும் படிகள் போன்றவற்றை சட்ட ரீதியான உரித்தாளர்களிடையே பகிர்ந்தளித்தல் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் பணிப்பொறுப்பாக இருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதியான 2016 நவம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் 79 வெளிநாட்டு இழப்பீடுகளுக்குரிய ரூபா 98,415,465 கூட்டுத்தொகை மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 93,936 செலுத்தப்படாது எஞ்சியிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(i)** வெளிநாட்டு நட்டஈட்டு தொகைகளை விடுவிக்காமைக்கான காரணங்களாக உரிமையாளர்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை, இழப்பீடுகளுக்குரிய உரிமையாளர்களின் தகவல்கள் தவிர காசோலைகள் மாத்திரம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடமிருந்து திணைக்களத்திற்கு கிடைத்தமை மற்றும் உரித்தாளர்கள் இனங்காணப்பட்டமையால் திணைக்களத்தில் நிறுத்தி வைத்திருத்தல் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. எனினும் அந்த விடயங்கள் தொடர்பில் வெளிநாட்டு சேவைகள் முகவராண்மை பணியகம் அல்லது உரிய பிரதேச செயலாளர் அலுவலகங்களில் ஆராய்ந்து உரிய உரிமையாளர்களுக்கு இழப்பீடுகளை விடுவிக்கும் முறையான மற்றும் செயற்திறனான வேலைத்திட்டமொன்று திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ii)** 8 சந்தர்ப்பங்களில் ரூபா 14,853,617 தொகையான இழப்பீடு மாத்திரம் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், ஏனைய நட்டஈட்டு தொகைகள் நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் பூதல்களுக்குரிய பொது வங்கிக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டமையின் காரணத்தால் அந்த பணத்தை திணைக்களத்தின் ஏனைய நோக்கங்களுக்காக ஈடுபடுத்தும் இயலுமை காணப்பட்டது. அவ்வாறே இழப்பீட்டுத் தொகைகளை உரிய உரித்தாளர்களுக்கு செலுத்த முடியாமை தொடர்பான அபாயமொன்றும் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது. பல்வேறு சந்தர்ப்பங்களில் கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் இது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நிலவும் நடைமுறையை திருத்தியமைத்து, இழப்பீட்டுத் தொகையை முதலீடு செய்து அதன் அடிப்படையில் பிற்போடப்படும் வட்டி நலன்களை இழப்பீட்டு உரிமையாளருக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறையொன்றினை தயாரிப்பதற்கும், இழப்பீடு செலுத்துதலை செயற்திறனாக்குவதற்கும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(iii)** வெளிநாட்டு நட்டஈடுகள் தொடர்பில் செயற்படல் திணைக்களத்தின் முக்கியத்துவமான பணியொன்றாவதுடன், திணைக்களத்தின் திருப்பதிகரமற்ற நிதிக் கட்டுப்பாட்டின் காரணமாக வெளிநாட்டு இழப்பீடுகள் தொடர்பில்

தனியானதொரு கணக்கொன்று பேணப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்கு இறுதியாக சமர்ப்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் போது நம்பிக்கைப் பொறுப்பு இறுதிக் கணக்குகளின் வெளிநாட்டு இழப்பீடு பெறுவனவு, செலுத்தல் மற்றும் செலுத்த வேண்டிய அளவுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியின் பங்கு முதலீடு தொடர்பான கணக்காய்வு**

---

1973 இன் 28 ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட செய்திப் பத்தரிகை கம்பனி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் மூலம் லேக்ஹவுஸ் நிறுவனத்தை அரசிற்கு சுவீகரிக்கும் போது அரசிற்காக பங்குகளை கொண்டிருப்பதாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பெயரிடப்பட்டிருந்தார். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i)** கணக்காய்விற்காக வழங்கப்பட்ட 2009 பெப்ரவரி 06 ஆந் திகதிய பங்குச் சான்றிதழின் பிரகாரம், அரசிற்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்தித்தாள் கம்பனியின் சாதாரணப் பங்குகளின் அளவானது 3,050,379 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஒவ்வொரு வருடத்தினதும் பங்கிலாபம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அந்தந்த வருடத்தில் பதிவு செய்யப்படும் பங்குகளின் எண்ணிக்கை 1989 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் 3,050,448 இலிருந்து 3,050,380 வரை கிரமமாக குறைவடைந்திருந்தது.

**(ii)** 1984 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் கிடைத்திருந்த ரூபா 102,001,336 கூட்டுத்தொகையான பங்கிலாபம் அந்தந்த ஆண்டுகளில் காசோலைகள் மூலம் பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்ட போதிலும், அந்த பணம் கிடைத்ததாக திறைசேரியின் சான்றுபடுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(iii)** 1973 இன் 28 ஆம் இலக்க வரையறுக்கப்பட்ட ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்குரிய அதிகாரங்களுக்கமைய நிறுவனத்தின் பிரச்சினைகள் தொடர்பில் அரசிற்காக பணிப்பாளர் சபைக்கு எழுத்துமூலமான கட்டளைகளை வழங்க முடியுமான போதிலும், அந்த அதிகாரங்களை பயன்படுத்தி நிறுவனத்தின் இலாபத்தினை உச்சப்படுத்தல், சிக்கனமற்ற செலவினங்களை குறைத்தல், ஏனைய நலன்புரி நடவடிக்கைகள் போன்றன தொடர்பில் நேரடியான தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(iv)** பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியின் பாரிய பங்குரிமையாளராவதுடன், அது தொடர்பில் திணைக்களத்தின் நம்பிக்கைப் பொறுப்பு பூதல் கணக்குகளிலேனும் எவ்வித வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஹெரீ ஹப்புக்கொட்டுவ பூதல்**

-----------------------------------------------

1949 மார்ச் 29 ஆந் திகதிய 133 ஆம் இலக்க ஹெரி ஹப்புக்கொட்டுவ அவர்களின் இறுதி விருப்புப் பத்திரம் மற்றும் 1953 யூலை 24 ஆந் திகதிய காலி மாவட்ட நீதிமன்றத்தின் T/8509 ஆம் இலக்க புரோபேட் அனுமதிப்பத்திரம் ஆகியவற்றின் பிரகாரம் ஹெரி ஹப்புகொட அவர்களின் பூதலுக்கான பாதுகாவலராக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பெயரிடப்பட்டிருந்தார். அதற்கமைய ஹெரி ஹப்புகொட அவர்களுக்கு சொந்தமாக இருந்த மற்றும் சொந்தமாக இருக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படும் அனைத்து அசையாத மற்றும் அசையும் சொத்துக்களுக்கும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பாதுகாவலராக பூதல் உரிமையாளரின் இறுதி விருப்புப் பத்திரத்தின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் பொறுப்பானது பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i)** அதிரியன் அல்விஸ் ஹப்புகொட என்றழைக்கப்படும் ஹெரீ ஹப்புகொட அவர்களின் சகோதரரின் 1936 செப்தம்பர் 15 ஆந் திகதிய 35197 ஆம் இலக்க இறுதி விருப்புப் பத்திரத்தின் பிரகாரம் அவரின் பூதலானது தமது சகோதரன் ஹெரி ஹப்புகொட அவர்களுக்கு உரித்தாகியிருந்தது. அதிரியன் அல்விஸ் ஹப்புகொட அவர்களின் இறுதி விருப்புப் பத்திரத்திற்கமைய ஹெரி ஹப்புகொட அவர்கள் திருமணம் புரியாமல் மரணமடைந்தால், அவரின் பூதல் பௌத்த அலுவல்கள் மேம்படுத்தல் மற்றும் மேம்பாட்டிற்கான பரம விஞ்ஞானார்த்த பௌத்த சங்கத்திற்கு உரித்தாக வேண்டும். எவ்வாறெனினும் பரம விஞ்ஞானார்த்த பௌத்த சங்கத்தின் உரித்து தொடர்பான தகவல்கள் திணைக்களத்தின் கோவைகளுக்கமைய உறுதிப்படுத்தப்படாததுடன், ஹெரி அவர்களின் இறுதி விருப்புப் பத்திரத்திற்கமைய பூதலின் உரித்தானது பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

**(ii)** ஹெரீ ஹப்புகொட பூதலுக்குரிய காலி மாநகர சபை எல்லையினுள் ஸ்ரீ ஹேமானந்த மாவத்தையில் அமைந்துள்ள 3 பேர்ச் அளவான காணித்துண்டு, கட்டிடம் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்தும் வியாபார நடவடிக்கைகளுக்காக 5 வருட காலத்திற்கு 2012 சனவரி 01 ஆந் திகதி குத்தகை உடன்படிக்கையொன்றின் மூலம் நபரொருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகைக்கு வழங்கிய ஆதனத்தின் மாதாந்த வாடகை ரூபா 750 ஆக இருந்ததுடன், ஆதனங்கள் 5 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ஆதனத்தின் முறையான மதிப்பீடொன்றில்லாது மாதாந்த குத்தகை பணம் ரூபா 750 ஆக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**(iii)** பூதலுக்கு சொந்தமல்லாத காணிகளின் பங்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உரித்து உறுதிப்படுத்தப்பட்டு, அந்த காணிகளை பொருத்தமான முறையில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தல், குத்தகைக்கு வழங்குதல் போன்ற ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்தல் தொடர்பில் திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**(iv)** திணைக்களத்தினால் 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் இந்த பூதலிலிருந்து முறையே ரூபா 21,000 மற்றும் ரூபா 36,000 தொகையான புலமைப்பரிசில்கள் செலுத்தப்பட்டிருந்தன. எனினும் 2016 ஆம் ஆண்டின் போது புலமைபரிசில்களை செலுத்த நடவடிக்கை எடுத்திருக்காதமையால்

மீளாய்வாண்டின் போது பூதல் உரிமையாளரின் நோக்கங்கள் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(v)** பூதல் உரிமையாளரின் இறுதி விருப்புப் பத்திரத்திற்கமைய ஒவ்வொரு வருடத்திலும் பூதலின் வருமானத்தில் 1/5 சேமிக்கப்பட வேண்டும் என்பதும், அந்த சேமிப்பானது ரூபா 100,000 ஆகும் போது அது மாணவர் உதவு தொகைகளை வழங்குவதற்கும் அனர்த்த நிலைமைகளின் போது உதவிகளை வழங்குவதற்கும் சேகரித்து வைக்கப்பட வேணடுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பூதலின் அந்த நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்தினால் வருமானம் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(vi)** பூதலுக்குரிய சுதுவெலிபொத தோட்டத்தில் சேவையாற்றி சேவை முடிவுற்ற மூன்று ஊழியர்களுக்கு உரிய திகதிகளில் பணிக்கொடை செலுத்தப்படாமையால் ரூபா 70,680 தொகையான மிகையேற்பாட்டினை செலுத்த நேர்ந்திருந்ததுடன், பூதலுக்குரிய மத்தக தோட்டத்தின் ஊழியர்களுக்கு 2015 ஆம் ஆண்டிற்குரிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்கள் உரிய தினங்களில் செலுத்தாமையால் மிகை அறவீடாக ரூபா 2,993 செலுத்த நேர்ந்திருந்தது.

**(vii)** 1949 மார்ச் 29 ஆந் திகதிய 133 ஆம் இலக்க இறுதி விருப்பு பத்திரத்தின் மற்றும் 1953 யூலை 24 ஆந் திகதிய புரபேட் அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம், பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு பூதல் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், ஆதனங்கள் தொடர்பான சட்டரீதியான நடவடிக்கைகள் கணக்காய்வு திகதி வரையிலும் முடிவுறுத்தப்பட்டிராமையால் தொடர்ந்தும் சட்டக் கட்டணங்கள் செலுத்த நேர்ந்திருந்ததுடன் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 69,775 தொகையான வழக்கறிஞர் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) ஜீ.எஸ். ஜயசூரிய பூதல்**

----------------------------------------

நுகேகொட, ரேமன்ட் வீதியில் 49 ஆம் இலக்க இடத்தில் வசித்து வந்த 1982 ஏப்ரல் 08 ஆந் திகதி மரணமடைந்த ஜீ.எஸ். ஜயசூரிய அவர்களின் பூதலின் பணிகளுக்காக 1980 செப்தம்பர் 20 ஆந் திகதிய 472 ஆம் இலக்க இறுதி விருப்புப் பத்திரத்தின் 505 ஆம் இலக்க கொடிசில் பத்திரம் மூலம் இலங்கையின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக கல்கிஸ்ஸ மாவட்ட நீதிமன்றத்தின் 744/ரீ ஆம் இலக்க வழக்கின் 1982 நவம்பர் 09 ஆந் திகதிய புரபேட் அனுமதிப்பத்திரத்தின் மூலம் மரணமடைந்த நபரின் அனைத்து சொத்துக்கள் மற்றும் பூதல், உரிமைகள் மற்றும் அறவிடப்பட வேண்டிய கடன் தொடர்பில் பெயரிடப்பட்ட பாதுகாவலராக இலங்கையின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் சட்ட ரீதியாக நியமிக்கப்பட்டிருந்தார். ''ஜோர்ஜ் ஸ்டொபன் ஜயசூரிய நம்பிக்கைப் பொறுப்பு'' தாபிக்கப்பட்டு நம்பிக்கைப் பொறுப்பின் ஆரம்ப மூலதனமாக பூதலுக்குரிய முதலீடுகளை பணமாக்குவதன் மூலம் மற்றும் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தை ஈடுபடுத்தி நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென இறுதி விருப்புப் பத்திரத்தில் மற்றும் கொடிசில் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i)** 1980 செப்தம்பர் 20 ஆந் திகதிய 472 ஆம் இலக்க இறுதி விருப்புப் பத்திரத்தின் மூலம் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டிருந்த மாதம்பே செம்புகட்டிய வத்த மற்றும் திக்ஓய பொயிஸ்டன் வத்த ஆகியவற்றுக்காக கிடைத்த இழப்பீட்டுத் தொகைகளும் 4 கம்பனிகளின்

பங்கு விற்பனை மூலம் பெறப்பட்ட பணம் அல்லது அந்த பங்குகளிலிருந்து கிடைக்கும் பங்கிலாப வருமானங்களும் ''ஜோர்ஜ நம்பிக்கைப் பொறுப்பிற்கு'' கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்களை நம்பிக்கைப் பொறுப்பிற்கு பெறப்பட்டதற்கான எழுத்துமூல சான்றுகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ii)** கம்பனிகளின் பங்கு மூலதன முதலீட்டிற்கான பங்கிலாப வருமானம் பெறப்பட்டிருக்கவில்லையென்பது நம்பிக்கைப் பொறுப்பின் கணக்குகளை பரிசோதனை செய்தபோது அவதானிக்கப்பட்டதுடன், பங்கிலாப வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(iii)** ரத்மலான லேட் கெதரின் தோட்டக் காணித்துண்டு, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சுவீகரிப்பதற்காக பெற வேண்டிய இழப்பீட்டுத் தொகையின் உரித்து தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணை செய்யப்பட்டவாறு இருந்தது. அந்த ஆதனங்களின் பொறுப்பானது பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டு 36 வருட காலம் கடந்திருந்த போதிலும், ஆதனத்தின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கு உரித்தாக நீதிமன்றத்திற்கு போதியளவான சான்றுகள் முன்வைக்கப்படாமை மற்றும் வழக்கிற்காக செயற்திறனாக முன்வைக்கப்படாமையால் உரித்தினை உறுதிப்படுத்த முடியாதிருந்ததெனினும், இந்த பணிகளுக்காக 2000 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 1,413,650 தொகை நம்பிக்கைப் பொறுப்பின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**(iv)** பூதலில் காணப்பட்ட அனைத்து சொத்துக்கள் மற்றும் ஆதனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய பணம் அல்லது வருமானத்தை சேகரிக்கும் போது நிலவிய முகாமைத்துவ செயற்திறனின்மை காரணமாக நிதிய நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கங்களை நிறைவேற்ற முடியாதிருந்தது.

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 04 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | - | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 59 | 50 | 09 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 17 | 13 | 04 |
| | **மொத்தம்** | **84** | **67** | **17** |